ISSN : 2456-821X அவையம் 2 (1) 2018 P.No. : 70-76

புதிய அவையம்

SACRED HEART RESEARCH PUBLICATIONS

# சமூதாயவியல் திறனாய்வுக் கோட்பாடும் ‘டொரினா’சிறுகதை தொகுப்பும்

மு. பரிமளா தேவி
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்*
*வேலூர் மாவட்டம்.*

**கட்டுரை பெறப்பட்டது : 15.04.2018** **ஏற்கப்பட்டது : 03.05.2018**

## முன்னுரை

சமுதாயத்தின் ஒரு அங்கமாய், அதனோடு மோதியும் இணைந்தும் இசைந்தும் ஒரு குறிப்பிட்ட சூழலில் வாழ்கின்றவன் மனிதன். மனிதகுலத்தில் தானும் ஒருவனாய் வாழும் அவன், வாழ்க்கை நடைமுறைகளின் காரணமாக அமையும் உணர்வுநிலையின் ஒரு வெளிப்பாடாக இலக்கியத்தைத் தோற்றுவிக்கிறான். இவ்வாறு இலக்கியத்தின் உருவாக்கத்திலும் அதன் பொருள் அமைவுகளிலும் மக்கள் மத்தியிலே அதன் நடமாட்டத்திலும் சமுதாயத்திற்கு முக்கியமான இடமும் பங்கும் உண்டு என்ற கருதுகோளை மையமாகக் கொண்டு சமுதாயவியல் அணுகுமுறை அமைகின்றது. தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலைப்பார்க்கும் யுவன் யுவதிகளுக்கு நேரம் காலம் எல்லாம் கிடையாது. அவர்களுடைய உணவு பழக்கவழக்கம் பண்பாடு, பணி செய்யும் நேரம், உறக்கம் இவை பொதுவான பணியின் இலக்கணத்திலிருந்து மாறியே இருக்கும். ஆண் பெண் ஒழுக்கபிறழ்வுகள் அதிக வருமானம், ஆடம்பரமான வாழ்ககை இவற்றைக் குறித்து அதிகமாக பேசப்பட்டு வருகின்றது. இத்தகைய பொதுபுத்தியிலிந்து விலகி நிகழும் உண்மையாக நிகழ்வுகளை மையமாக கொண்டு தமிழில் வெளிவந்திருக்கும் சிறுகதைத் தொகுப்பு டொரினா. கார்த்திக் பாலசுப்பிரமணியன் எழுதியது. யாவரும் பதிப்பகம் 2017 ல்

இந்நூலையினை வெளியிட்டுள்ளது. இது இவருடைய முதல் சிறுகதைத் தொகுப்பாகும். இந்நூலினை சமூகவியல் திறனாய்வுக் கோட்பாட்டினை பயன்படுத்தி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவுகளையும் அவற்றைப் புரிந்துகொள்வதற்கான வழிமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டு சமுதாயவியல் அணுகுமுறைக்குத் துணை செய்யக்கூடிய பரிமாணங்கள் அல்லது அடிப்படைகளைப் பின்வருமாறு பகுக்கலாம் என்கிறார் தி.சு. நடராசன்.

- ❖ சமுதாயப் பின்னணி (அ) களம்
- ❖ எதிர்கோள் அ ஏற்பு
- ❖ சமுதாயச் சித்தரிப்பு
- ❖ சமுதாய மதிப்புகள்
- ❖ சமுதாயச் சிக்கல்கள்
- ❖ சமுதாய மாற்றம்

**சமுதாய பின்னணி (அ) களம்**

ஒரு படைப்பாளனின் சமுதாயப் பின்புலம்தான் அவர் படைப்பிற்கான கருவூலக் கிடங்காக அமைந்து விடுகிறது.“படைப்பையும் படைப்பாளனையும் குறிப்பிட்ட சமூதாயச் சூழல் உருவாக்குகின்றது. எனவே அவ்வக்காலச் சமுதாயச் சூழலின் பின்புலத்தினைப் புரிந்துக்கொள்வது சமுதாயவியல் திறனாய்வுக்கு அவசியம் . ஏனெனில் படைப்பு – படைப்பாளன் - சமுதாயம் எனும் இவை, தமக்குள் நெருக்கமுறப் பிணைப்புக் கொண்டவை என்று சமுதாயவியல் திறனாய்வு சொல்கிறது. இலக்கியத்தில் கூறப்படுகின்ற செய்திகளும் அவற்றின் தன்மைகளும் குறிப்பிட்ட சமுதாய அமைப்பின் காரண காரியங்களோடு நேரடியாக உறவுக் கொண்டவை. இவற்றைச் சரிவரப் புரிந்து கொள்கிற போது இலக்கியத்தின் செய்திகளும் சரிவரப் புரிந்து கொள்ளப்படுகின்றன”. என்று திசு. நடராசன் குறிப்பிடுகின்றார்.

மென்பொருள் நிறுவனங்களைச் சார்ந்து உருவாகியுள்ள புதிய சமூக பண்பாட்டு வெளியை குறித்து இத்தொகுப்பின் சில கதைகள் கேள்விக்குட்படுத்துகின்றன. தகவல் தொழில் நுட்பத்துறையில் வேலைப்பார்க்கும் இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் குறித்த சமூகத்தின் பார்வையை அலசுகிறது. வடமாநிலம் குறித்தும் அங்குள்ள மனிதர்கள் மீதான பார்வையும் பதிவுசெய்துள்ளது. கார்த்திக் பாலசுப்பிரமணியன் தகவல் தொழில்நுட்ப



பதிப்பு இணையம்

வல்லுநராக இருப்பதால் இப்படைப்பிலும் அவர்துறைச்சார்ந்த சில கதைகளை உருவாக்கியுள்ளார்.

“யாரோ கதவத் தட்டற மாதிரியில்ல என்று பக்கத்தில் உள்ள மனைவி கேட்டபோதுதான் சிட்னிப் போன்ற பெரிய நகரத்தில் அடுக்ககக் குடியிருப்பில் அவ்வளவு எளிதாக யாரும் உள்ளே வந்துவிட முடியாது. டீ –சர்ட்டை அணிந்துக்கொண்டு .ஹாலுக்கு சென்ற இடைப்பட்ட நேரத்தில் மெல்பனில் இனவெறித் தாக்குதலுக்குட்பட்ட மலையாளி ஒருவர் கொடுத்த பேட்டி மின்னலடித்துப் போனது.

இந்த நேரத்தில் ஏன் கதவை தட்டுகிறீர்கள். யார் நீங்கள் ? என் பெயர் மார்க்… உங்களுக்கு பக்கத்து வீட்டில் வசிக்கிறேன். சனிக்கிழமை காலைப்பொழுதுகளில் பக்கத்தில் இருக்கும் இந்திய மளிகைக்கடைக்கு நாங்கள் பொருட்கள் வாங்க செல்லும் போது அவர்களும் வருவார்கள். ஒரு சிறு தலையசைப்பு, குறுநகை அவ்வளவுதான் எங்களுக்கும் அவர்களுக்கும் இது வரையிலான இரண்டு ஆண்டுகளில் நடந்த தகவல் பரிமாற்றங்கள்” என்று குறிப்பிடுகின்றார். தன் எதிர் பிளாட்டில் இருக்கும் வயதான தம்பதியரிடம் இதுவரை பேசியது கூட இல்லை. சக மனிதர்களோடு பேசவும் பழகவும் இயலாத ஒரு சூழ்நிலையை எடுத்துரைக்கின்றார்.

**எதிர்கோள் (அ) ஏற்பு**

இலக்கியத்தை எதிர்கொள்வது பற்றி : அடிப்படையில் இது சமுதாயத் தேவை. குறிப்பிட்ட படைப்பு , குறிப்பிட்ட சமுதாயத்தினால் எவ்வாறு எதிர்கொள்ளப்படுகிறது என்பது – அந்தப் படைப்பினுடைய தகைமை அல்லது பெறுமதியையும் மற்றும் - அதனை எதிர்கொள்கின்ற சமுதாயக்குழு அல்லது வாசகர்களுடைய தேவை தரம் பயிற்சி முதலிய தகைமைகளையும் பொறுத்தே அமைகிறது.

**சமுதாயச் சித்தரிப்பு**

1. சமுதாயத்திலுள்ள பிரச்சனைகளையும் ,துன்ப துயரங்களையும் எதிர்கொண்டு ஆனால் நேராகக் காட்ட விரும்பாமல் ,ஒன்றில் , மிகையான கற்பனையுடன் புனைந்துரைத்தல்.
2. வாழ்க்கையையும் அனுபவங்களையும் மற்றும் சுற்றியிருப்பவற்றையும் நுணுக்கமான விவரங்களுடன் இயல்பு நவிற்சியாகச் சித்தரித்தல்

பதிப்பகம் அகமெய்யம்

3. சமுதாயத்தையும் வாழ்க்கையனுபவங்களையும் அப்படியே சொல்லுவது மட்டுமின்றி அவற்றை எள்ளுதலும் விமரிசித்தலும் - சொல்கிற செய்திகளுடன் இழையோடுவது.
4. சமுதாய நிலைகளையும் போக்குகளையும் காரணகாரிய முறையில் கண்டு , அவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இனங்கண்டு அவற்றை இலக்கியப் பொருளாக எடுத்துரைத்தல்.

இரு கோப்பைகள், முடிச்சுகள், பார்வை,டொரினா கதைகளில் குடும்பம் என்ற சித்தரிப்பு வரும்போது கணவன் மனைவி குழந்தை தனிக்குடித்தனம் குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ளன, கூட்டுக்குடும்ப வாழ்க்கை என்பது புனைவுகளில் கூட இல்லை. இத்தொகுப்பில் உள்ள இடம்பெற்றுள்ள சிறுகதைகளில் நகரங்களைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. இருகோப்பைகள் சிறுகதையில் "அதுவும் இரவு எட்டு மணிக்கெல்லாம் ஊரடங்கிப் போய்விடுகின்ற பொதுப்பேருந்தில் பயணம் செய்யும் போது கூட அடுத்தவர்களுக்குக் கேட்டுவிடாத கிசுகிசுக் குரலில் பேசும் மக்கள் வாழ்கின்ற சிட்னி போன்ற பெரு நகரத்தில்" என்று தான் வாழும் சமூகத்தை குறிப்பிடுகின்றார்.

**குடியிருப்புகள்**

டொரினா சிறுகதையில் "இறங்கி நடந்தால் கடற்கரை வந்துவிடும் . மனது எப்பொழுதும் சஞ்சலப்பட்டுப் போகும் தருணங்களில் எல்லாம் முகத்தில் காற்றுப்பட கொஞ்சத்தூரம் கடலைப் பார்த்து நடந்து வந்தால் போதும் எனக்கு .வீடு திரும்பும் போது கோடைக்கால வானம் போல மனம் தெளிந்து போயிருக்கும்" என்று தான் வாழ்கின்ற வீட்டின் அமைப்பினை பற்றி குறிப்பிடுகின்றார்.

**சமுதாய நிலைப்பாடுகள்**

வழிப்போக்கன் கதையில் இன்று வரை நொய்டாவைப் பற்றி அறிந்து வைத்திருந்தவை எல்லாமே பெரும்பாலும் அச்சம்மூட்டுபவையாகவே இருந்தன. காயலான் கடையிலிருந்து எழுந்து புறப்பட்ட நிலையில் இருந்த பேருந்துகளும் மனிதனை மனிதன் வைக்கும் இழுக்கும் கைவண்டி ரிக்சாக்களும்,'மெக் டி' உணவக வாயில்களில் கொக்கோ – கோலாக்களை பிச்சை கோரும் தெருவோரச் சிறு பிள்ளைகளும் எனக்கு இருபது வருடம் பின்னோக்கிச் சென்ற தோற்றத்தினைக் கொடுத்தது.

**வாழ்க்கை அனுபவம்**

வழிப்போக்கன் கதையில் “ இன்றோடு இந்த நொய்டாவுக்கு வந்து ஆறு நாட்களாகிவிட்டன. நான் புதிதாய்ச் சேர்ந்திருக்கும் கட்டுமான நிறுவனம் நொய்டாவைத் தலைமையிடமாகக் கொண்டது. ஆதனால் பயிற்சிக்காகச் சென்னையிலிருந்து நொய்டாவிற்கு நான் மற்றும் என் கல்லூரி நண்பர்கள் அறுவர் உட்பட 56 பேர் அழைக்கப்பட்டிருந்தோம். பயிற்சி முடிந்து அனைவருக்கும் பணியானை கொடுக்கப்பட்டிருந்து. என்னையும் சோனியையும் தவிர. என் நண்பர்கள் குழுமத்தில் நான் மட்டும் தனித்து விடப்பட்டிருந்தேன். ஊர் புதிது. மொழி புதிது. தண்ணீர், தட்பவெட்பம் என எல்லாம் புதிதெனக்கு” என்று தன் அனுபவத்தை பதிவு செய்கிறார்.

**சமுதாய பிரிவுகளும் குழுக்களும்**

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஆஸ்திரேலியாவில் வந்து குடியேறிய போலந்து குடும்பம் அவளுடையது. எனது மூதாதையர்கள் ஆஸ்திரேலியாவிற்கு தங்க வேட்டைக்காக சீனாவின் சியாமென் பகுதியிலிருந்து வந்தவர்கள் .பல்வேறு காரணங்களால் பலரும் ஊருக்கு திரும்பிவிட்டனர். அப்படித் திரும்பாமல் தங்கிவிட்ட ஒரு சில குடும்பங்களில் ஒன்று எங்களுடையது. ஆஸ்திரேலியர்களாக மாறவும் முடியாமல் சீனர்களாகத் திரும்பவும் முடியாமல் தவித்தவர்களில் மிச்சம் நானென்று இருகோப்பைகள் என்னும் கதையில் குறிப்பிடுகின்றார்.

**<u>ஊர்</u>**

நொய்டாவில் தங்கி வேலை பார்த்தப்பொழுது அறை எடுத்து தங்குவதற்காக தேடி அலைந்து புரோக்கரின் உதவியை நாடினேன். நல்ல வாட்டசாட்டமான ஆள். சில வீடுகளை காட்டினான் . முன்று மாத வாடகையை அடவான்ஸ் தொகையாக முன்கூட்டியே தந்து விடவேண்டும் என்றும் ஒரு மாத வாடகையை புரோக்கர் கமிசனாக தர வேண்டும் என்றான். ஏழை வீட்டு பிள்ளைகளான எனக்கும் நண்பனுக்கும் கட்டுபடியாகவில்லை. நாங்கள் வீடு கிடைக்காமல் சோர்ந்து போய் இருந்த நிலையில் பரட்டை தலையுடன் வந்த ஒருவன் உங்களுக்கு என்ன உதவி வேண்டும் என்றான். நாள் முழுவதும் எங்களோடு இருந்து நல்ல வசதியான காற்றோட்ட முள்ள வீட்டை மிகக் குறைந்த விலைக்கு பிடித்துக்கொடுத்தான். அவனுக்கு எவ்வளவு புரோக்கர் கமிசன் கொடுப்பது என கேட்டுக்கொண்டிருந்த சூழலில் “ இந்தப் பிள்ளைகளைப் பார்த்தால் ஊருக்குப் புதிது போலிருந்தது. பார்ப்பதற்குப் பாவமாக இருந்தது. ஏதோ நம்மலால முடிஞ்சது. எல்லாத்துக்கும் காசு தானா ?” – பெயரைக் கூட சொல்லா அவன் , தனியே கைகளை காற்றில் அசைத்தபடி சென்றுகொண்டிருந்தான் . தான்

நினைத்தற்கு மாறாக இந்த ஊரிலும் மனித நேயம் உள்ளவர்கள் இருக்கின்றார்கள் என்பதை எடுத்துரைக்கின்றார்.

**சமுதாய மதிப்புகள்**

“ சமுதாயம் முழுமைக்கோ அதன் குறிப்பிட்ட ஒரு பிரிவு அல்லது வர்க்கத்திற்கோ உள்ள பொதுவான மனித நடத்தையின் நியதிகள் மற்றும் தரவுகளின் தொகுதியே சமுதாய மதிப்புகள் ஆகும்.

**காதல்**

யயகிரகணம் சிறுகதையில் தான் விரும்பிய தன்னைக் காதலித்த சுஜாதா தன் நண்பனது வீட்டில் அவனுடன் ஒன்றாக இருந்ததைக் கண்ட மனோ அவர்களை செருப்பால் அடித்துவிட்டு வெளியேறுகிறான். காதல் என்பது ஏமாற்றும் ஒன்றாக இருக்கின்றது. பெண் என்பவள் ஒருவரை மட்டும் காதலிக்காமல் இருவரை ஒரே நேரத்தில் காதலிப்பவளாக இருக்கின்றாள் என்பது தெரிகின்றது. இதே கதையில் விபசாரதொழில் புரியும் பெண்ணொருத்தியை குறித்து “ஜிகுஜிகு மின்னும் கண்ணாடி சேலை அணிந்துகொண்டு முகம் முழுக்க ஒப்பனை. புத்தம் புதிய மல்லிகைப்பூ. யாரையோ தேடும் பாவனையில் இடம் வலம் மாறிமாறி பார்த்துக்கொண்டிருக்கும் பெண்ணும் இருக்கின்றாள்.” அவளை காதல் மொழி பேசுபவளாக சித்தரித்துள்ளார்.

**கற்பு**

அன்பின் ஷிவ் ( கணவன் ) உனக்கு நினைவிருக்குமானால் நான் டென்வர் வந்த மூன்றாம் நாளில் ஜாக் என்னும் ஜாகஸ் மெரிஸ் நண்பனைப் பற்றி கூறியிருப்பேன் . அலுவல் நிமித்தமாக அயல்தேசம் வந்த நாளிலிருந்து இன்று வரை மதிப்பும் தைரியமும் நம்பிக்கையும் கொடுத்து வந்த ஜாக் சென்ற சனிக்கிழமையிலிருந்து என் அறையைப் பகிர்ந்துகொள்கிறான். நாங்கள் இருவரும் வாழ்க்கையும் பகிர்ந்துகொள்ளலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். நமக்கு திருமணமான கடந்த ஆறு மாதங்களில் நான் உன்னை வேண்டி கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான் விவாகரத்து. திருமணம் காதல் முதலிய மதிப்புகள் தற்பொழுது மாறியுள்ளது என்பதை பதிவுசெய்கின்றார்.

**அலுவலக மகளிர் பிரச்சனை**

ஐ.டி.யில் பணிபுரியும் சுஜாதா நாள் முழுவதும் தன் குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாமல் அம்மாவிடம் தொலைதூரத்தில் விட்டுவிட்டு வந்து இங்கு வேலைசெய்கிறோமே என்று வருத்துடனே அன்றைய நாளுக்கான வேலையை



பதிப்பு அகழ்

விரைவாக செய்துவிட்டு வழக்கம்போல் செல்லும் கேப் வரும் நேரம் இதுவல்ல என்பதை அறிந்து மாநகரப் பேருந்தில் பயணம் செய்கிறாள் . அப்போது அவளிடம் டிக்கெட் எடுக்க எட்டு ரூபாய் இல்லாத காரணத்தினால் ஐந்நூறு ரூபாய் நீட்டுகின்றாள். நுடத்தனர் கண்டபடி அவளைத் திட்ட தொடங்கினார். இந்த ஸ்டாப்புல ஏறவங்களே இப்படித்தான் சார் மாசம் நாப்பது ஐம்பது ஆயிரமுன்னு சம்பளம் வாங்குறது. காசு இருக்குற திமிறு சார் .எதாவது கேட்டா மட்டும் கோபம் மட்டும் பொத்துகிட்டு வரும். இது சுஜாதாவுக்கு கோபத்தை கிளறியது. “ அதான் அடுத்த ஸ்டாப்ல இறங்கிக்கிறேன்னு சொல்றேன்ல அப்புறம் ஏன் தேவையில்லாம கத்துறீங்க”.

“நானும் உன்னைப்போல் மடிப்பு கலையாமத் கிளம்பி மேக்கப் கலையாம திரும்கி குளுகுளுனு ஏசியில உக்காந்து பெஞ்சத் தேய்ச்சுகிட்டு காதுல பாட்டுக்கேட்டு ஜாலியா வந்தா இப்படி ஏன் கேட்கப்போறேன் பைத்தியம் மாதிரி என்று நடத்துனர் அடுக்கடுக்காய்ப் புலம்பிக்கொண்டிருக்கும் போதே சுஜாதா பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தாள்”. தகவல் தொழில் நுட்ப துறையை சார்ந்தவர்கள் மீது பதிந்துள்ள பொதுப்புத்தியை விவரிக்கின்றார்.

**சமுதாய மாற்றம்**

சமூக மாற்றம் என்பது இத்தொகுப்பினை பொறுத்தவரை மனித மனங்களில் ஏற்படுத்தும் மாற்றத்தைத் தான் குறிப்பிடுகின்றது. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் பணிபுரிபவர்களின் வாழ்க்கை குறித்த பொதுபுத்தியை மாற்றும் ஒன்றே சமூக மாற்றமாக கொள்ளமுடியும்.

**முடிவுரை**

- இலக்கியம் வெற்று வெளியிலிருந்து பிறப்பதில்லை. குறிப்பிட்ட சூழலில் தான் பிறக்கின்றது.
- இலக்கியம் சமுதாயத்தினால் ஏற்கப்படவோ, புறக்கணிக்கப்படவோ செய்கிறது.
- படைப்பாளியின் சமுதாய நோக்கம் , தேவை முதலியவை அவனுடைய இலக்கியத்தில் வெளிப்படுகின்றன.

**துணைநூற்பட்டியல்**

1. கார்த்திக் பாலசுப்ரமணியன்,டொரினா, யாவரும் பதிப்பகம் ,சென்னை,2017.
2. முனைவர்.க.பஞ்சாங்கம்,இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் பதிப்பகம் , தஞ்சாவூர் ,2016.
3. தி.சு. நடராசன் ,திறனாய்வுக் கலை,சொந்தம் பிரிண்டர்ஸ்,சென்னை,2006.